**Signature and Name of Invigilator**

1. (Signature) ______________________

   (Name) ______________________

2. (Signature) ______________________

   (Name) ______________________

**Answer Sheet No. :** ..............................................

(To be filled by the Candidate)

**Roll No.** | | | | | | | |

(In figures as per admission card)

**Roll No.** ______________________

(In words)

**Test Booklet No.**

**D – 2606**

**PAPER – II**

# TAMIL

**Time : 1¼ hours]** **[Maximum Marks : 100**

Number of Pages in this Booklet : **16** Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the question booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Serial No. of the booklet should be entered in the Answer-sheets and the Serial No. of Answer Sheet should be entered on this Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the oval as indicated below on the correct response against each item.

   **Example :** (A) (B) ● (D)

   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the Answer Sheet given **inside the Paper I booklet only**. If you mark at any place other than in the ovals in the Answer Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your name or put any mark on any part of the test booklet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is NO negative marking.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. पहले पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी। पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें। खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं। दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें। इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे। उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका की क्रम संख्या उत्तर-पत्रक पर अंकित करें और उत्तर-पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं। आपको सही उत्तर के दीर्घवृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है।

   **उदाहरण :** (A) (B) ● (D)

   जबकि (C) सही उत्तर है।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पत्र I के अन्दर दिये गये** उत्तर-पत्रक पर ही अंकित करने हैं। यदि आप उत्तर पत्रक पर दिये गये दीर्घवृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिन्हांकित करते है, तो उसका मूल्यांकन नहीं होगा।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें।
8. यदि आप उत्तर-पुस्तिका पर अपना नाम या ऐसा कोई भी निशान जिससे आपकी पहचान हो सके, किसी भी भाग पर दर्शाते या अंकित करते हैं तो परीक्षा के लिये अयोग्य घोषित कर दिये जायेंगे।
9. आपको परीक्षा समाप्त होने पर उत्तर-पुस्तिका निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पैन का ही इस्तेमाल करें।**
11. **किसी भी प्रकार का संगणक ( कैलकुलेटर ) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है।**
12. **गलत उत्तर के लिए अंक नहीं काटे जायेंगे।**

# TAMIL

## PAPER – II

**Note:** **This paper contains fifty (50) multiple- choice questions, each question carrying two (2) marks. Attempt all the questions.**

**குறிப்பு :** இந்த வினாத்தாளில் ஐம்பது (50) விடை தெரி வினாக்கள் உள்ளன. ஒவ்வொரு வினாவும் இரண்டு (2) மதிப்பெண்களைக் கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

**1.** தென் திராவிட மொழி :

(A) கோதா

(B) தெலுங்கு

(C) கூவி

(D) மால்டோ

**2.** வஞ்சியடிகளும் அகவலடிகளும் விரவியது:

(A) முல்லைப்பாட்டு

(B) குறிஞ்சிப்பாட்டு

(C) பட்டினப்பாலை

(D) நெடுநல்வாடை

**3.** பரிமேலழகர் உரை எழுதியது:

(A) முருகு

(B) பரிபாடல்

(C) கலித்தொகை

(D) முல்லைப்பாட்டு

4. நல்லுருத்திரன் பாடியது:

(A) பாலை

(B) குறிஞ்சி

(C) மருதம்

(D) முல்லை

5. திரிகடுகத்துள் ஒன்று:

(A) கடுகு

(B) திப்பிலி

(C) சீரகம்

(D) பூண்டு

6. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று:

(A) குண்டலகேசி

(B) நீலகேசி

(C) சூளாமணி

(D) உதயண குமார காவியம்.

7. முப்பத்தொன்பது நூல்களின் தொகுப்பாக உள்ள திருமுறையின் எண்:

(A) 5

(B) 7

(C) 9

(D) 11

8. பெருமாள் திருமொழி பாடியவர் :

(A) குலசேகராழ்வார்

(B) பெரியாழ்வார்

(C) ஆண்டாள்

(D) திருமங்கையாழ்வார்

9. சென்னிகுளம் அண்ணாமலையார் பாடியது :

(A) சதகம்

(B) அந்தாதி

(C) சிந்து

(D) மாலை

10. நன்னெறியை இயற்றியவர் :

(A) ஔவையார்

(B) குமரகுருபரர்

(C) சிவப்பிரகாசர்

(D) வேதநாயகர்

11. யாப்பருங்கலத்தின் உரையாசிரியர் :

(A) குணசாகரர்

(B) அமுதசாகரர்

(C) சாமிநாத தேசிகர்

(D) வைத்தியநாத தேசிகர்

12. திருநெல்வேலி வரலாற்றை எழுதியவர்:

(A) எல்லிசு

(B) பெஸ்கி

(C) போப்

(D) கால்டுவெல்

13. பதினென் புராணங்களுள் அடங்காதது :

(A) அக்கினி புராணம்

(B) தல புராணம்

(C) ஆரிய புராணம்

(D) பிரம புராணம்

**14.** தமிழிசை மும்மூர்த்திகளுள் ஒருவர் :

(A) சம்பந்தர்

(B) அப்பர்

(C) முத்துத்தாண்டவர்

(D) சுந்தரர்

**15.** கொங்குவேளிர் இயற்றியது :

(A) பெருந்திரட்டு

(B) புறத்திரட்டு

(C) வளையாபதி

(D) பெருங்கதை

**16.** உறுதிக்கூற்று : தண்டியலங்காரம் என்பது ஓர் அணியிலக்கண நூல்.

காரணம் : அது ஆசிரியனாலும் பொருளினாலும் பெற்ற பெயர்.

(A) (உ) ; (கா) இரண்டும் சரி

(B) (உ) சரி ; (கா) தவறு

(C) (உ) தவறு ; (கா) சரி

(D) (உ) ; (கா) இரண்டும் சரியல்ல

**17.** உறுதிக்கூற்று : 'வேதம் செய்த தமிழ் மாறன்' எனக் குருகூர் நம்பி போற்றப்படுகிறார்.

காரணம் : அவர் இயற்றியது திராவிடமறை எனத்தகும்.

(A) (உ) சரி ; (கா) தவறு

(B) (உ) ; (கா) இரண்டும் தவறு

(C) (உ) தவறு ; (கா) சரி

(D) (உ) ; (கா) இரண்டும் சரி

**18.** உறுதிக்கூற்று : நாலாயிர உரையில் படி அல்லது கிரந்தம் எனக் குறிக்கும் முறை உள்ளது.

காரணம் : ஒற்றெழுத்து நீக்கி 30 எழுத்துக்கள் கொண்டதை ஒரு படி எனக் கணக்கிடுவது மரபு.

(A) (உ) தவறு ; (கா) சரி

(B) (உ) சரி ; (கா) தவறு

(C) (உ) ; (கா) இரண்டும் சரி

(D) (உ) ; (கா) இரண்டும் சரியல்ல

**19.** உறுதிக்கூற்று : சிலம்பு + அதிகாரம், சிலப்பதிகாரம் என்று ஆயிற்று.

காரணம் : இப்புணர்ச்சி மெலித்தல்விகாரம்

(A) (உ) ; (கா) இரண்டும் சரியல்ல

(B) (உ) ; (கா) இரண்டும் சரி

(C) (உ) சரி ; (கா) தவறு

(D) (உ) தவறு ; (கா) சரி

**20.** உறுதிக்கூற்று : மூதுரை என்பது 30 பாடல்களால் நீதிக்கருத்துக்களைக் கூறும் பனுவல் ஆகும்.

காரணம் : வாக்குண்டாம் என்னும் பெயரிய அது ஔவையாரால் இயற்றப்பட்டது.

(A) (உ) சரி ; (கா) சரியன்று

(B) (உ) தவறு ; (கா) சரி

(C) (உ) ; (கா) இரண்டும் சரி

(D) (உ) ; (கா) இரண்டும் சரியல்ல

**21.** உறுதிக்கூற்று : சேக்கிழாரால் பாடப்பட்டது பெரியபுராணம்.

காரணம் : நீண்ட அடிகளால் ஆகிய பாடல்களைக் கொண்டது.

(A) (உ) சரியன்று ; (கா) சரி

(B) (உ) சரி ; (கா) சரியன்று

(C) (உ) ; (கா) இரண்டும் சரி.

(D) (உ) ; (கா) இரண்டும் சரியல்ல

**22.** உறுதிக்கூற்று : சங்க இலக்கியம் ஒரு செவ்வியல் இலக்கியம்.

காரணம் : அனைத்து மக்களின் அகப்புற ஒழுக்கங்களைச் சுட்டுதல் அதன் இயல்பு.

(A) (உ) ; (கா) இரண்டும் சரி

(B) (உ) ; (கா) இரண்டும் சரியல்ல

(C) (உ) சரி ; (கா) தவறு

(D) (உ) தவறு ; (கா) சரி

**23.** உறுதிக்கூற்று : சொல்லின் செல்வன் என அனுமனைக் கம்பர் குறிப்பிடுகிறார்.

காரணம் : சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் அனுமனுக்கு உண்டு.

(A) (உ) ; (கா) இரண்டும் சரி

(B) (உ) சரி ; (கா) தவறு

(C) (உ) ; (கா) இரண்டும் சரியல்ல

(D) (உ) தவறு ; (கா) சரி

**24.** உறுதிக்கூற்று : தெ.பொ.மீ பதிப்பித்தது புறத்திரட்டு ஆகும்.

காரணம் : தலைமக்கள் பெயர் இடம்பெறா அப்புறப்பாடல்கள் உலகப்பொதுமையானவை.

(A) (உ) சரி ; (கா) சரி

(B) (உ) தவறு ; (கா) தவறு

(C) (உ) சரி ; (கா) தவறு

(D) (உ) தவறு; (கா) சரி

**25.** உறுதிக்கூற்று : தீதும் நன்றும் பிறர்தரவாரா.

காரணம் : அவரவர் செயல்களைப் பொறுத்தே நன்மை தீமைகள் விளையும்.

(A) (உ) ; (கா) இரண்டும் சரி

(B) (உ) சரி ; (கா) தவறு

(C) (உ) தவறு ; (கா) சரி

(D) (உ) ; (கா) இரண்டும் சரியல்ல

நிரல்படுத்துக

26. சதுரகராதி :

(A) தொடையகராதி , தொகையகராதி , பொருளகராதி , பெயரகராதி

(B) பொருளகராதி , பெயரகராதி , தொகையகராதி , தொடையகராதி

(C) பெயரகராதி , பொருளகராதி , தொகையகராதி , தொடையகராதி

(D) பொருளகராதி , தொகையகராதி , தொடையகராதி , பெயரகராதி .

27. அகவல் பாவகை :

(A) இணைக்குறளாசிரியம் , நேரிசையாசிரியம் , நிலைமண்டிலயாசிரியம் , அடிமறிமண்டிலயாசிரியம்.

(B) அடிமறிமண்டிலயாசிரியம் , நேரிசையாசிரியம் , இணைக்குறளாசிரியம் , நிலைமண்டிலயாசிரியம்

(C) நிலைமண்டிலயாசிரியம் , அடிமறிமண்டிலயாசிரியம் , நேரிசையாசிரியம் , இணைக்குறளாசிரியம்

(D) நேரிசையாசிரியம் , இணைக்குறளாசிரியம் , நிலைமண்டிலயாசிரியம் , அடிமறிமண்டிலயாசிரியம்

28. அரண் வகை :

(A) கடல் , மலை , காடு , மதில்

(B) மலை , காடு , மதில் , கடல்

(C) மதில் , காடு , மலை , கடல்

(D) காடு , மதில் , கடல் , மலை

29. அவலம் :

(A) இளிவு , இழவு , அசைவு , வறுமை

(B) இழவு , அசைவு , வறுமை , இளிவு

(C) அசைவு , வறுமை , இளிவு , இழவு

(D) இழவு , இளிவு , வறுமை , அசைவு

30. யுகம் :

(A) கிருதயுகம் , கலியுகம் , திரேதயுகம் , துவாபரயுகம்

(B) திரேதயுகம் , துவாபரயுகம் , கிருதயுகம் , கலியுகம்

(C) கிருதயுகம் , திரேதயுகம் , துவாபரயுகம் , கலியுகம்

(D) கலியுகம் , கிருதயுகம் , திரேதயுகம் , துவாபரயுகம்

31. அச்சம் :

(A) அரசன் , அணங்கு , விலங்கு , கள்வர்

(B) விலங்கு , அணங்கு , அரசன் , கள்வர்

(C) கள்வர் , விலங்கு , அணங்கு , அரசன்

(D) அணங்கு , விலங்கு , கள்வர் , அரசன்

32. பதவி :

(A) சாலோகம் , சாமீபம் , சாரூபம் , சாயுச்சியம்

(B) சாமீபம் , சாரூபம் , சாலோகம் , சாயுச்சியம்

(C) சாயுச்சியம் , சாரூபம் , சாமீபம் , சாலோகம்

(D) சாலோகம் , சாரூபம் , சாமீபம் , சாயுச்சியம்

33. சொல்லில் தோன்றும் பாவம் :

(A) பொய், குறளை, பயனில்சொல், கடுஞ்சொல்

(B) பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல்

(C) கடுஞ்சொல், பயனில்சொல், குறளை, பொய்

(D) குறளை, பொய், பயனில்சொல், கடுஞ்சொல்

34. சாதிப்பெரும் பண் :

(A) பெருகியன் மருதம், அருகியன் மருதம், அகநிலை மருதம், புறநிலை மருதம்

(B) அகநிலை மருதம், அருகியன் மருதம், பெருகியன் மருதம், புறநிலை மருதம்

(C) புறநிலை மருதம், அகநிலை மருதம், பெருகியன் மருதம், அருகியன் மருதம்

(D) அகநிலை மருதம், புறநிலை மருதம், அருகியன் மருதம், பெருகியன் மருதம்

பொருத்துக :

**35.** (a) திருவந்தாதி — (i) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

(b) திருவருணை அந்தாதி — (ii) நம்பியாண்டார் நம்பிகள்

(c) திருவரங்கத்தந்தாதி — (iii) எல்லப்ப நாவலர்

(d) திருத்தொண்டர் திருவந்தாதி — (iv) திருமழிசை

| | **a** | **b** | **c** | **d** |
|---|---|---|---|---|
| (A) | iv | iii | i | ii |
| (B) | i | iii | iv | ii |
| (C) | ii | iii | i | iv |
| (D) | i | iv | ii | iii |

**36.** (a) அலை ஓசை — (i) நா.பா.

(b) அகல் விளக்கு — (ii) அகிலன்

(c) வேங்கையின் மைந்தன் — (iii) கல்கி

(d) சமுதாய வீதி — (iv) மு.வ.

| | **a** | **b** | **c** | **d** |
|---|---|---|---|---|
| (A) | ii | iii | i | iv |
| (B) | i | iii | ii | iv |
| (C) | iv | iii | ii | i |
| (D) | iii | iv | ii | i |

**37.** (a) படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டு வரும் குடி — (i) ஐயனாரிதனார்

(b) கல்தோன்றி....... முன் தோன்றி மூத்த குடி — (ii) வில்லி

(c) பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து — (iii) கம்பர்

(d) தழற்புகை நிறக் கடவுள் தந்த தமிழ் — (iv) நச்சர்

| | **a** | **b** | **c** | **d** |
|---|---|---|---|---|
| (A) | iii | ii | i | iv |
| (B) | ii | i | iii | iv |
| (C) | iv | i | ii | iii |
| (D) | i | iii | ii | iv |

38. (a) கு.ப.ரா (i) கடவுளும் கந்தசாமியும்

(b) கல்கி (ii) சிவப்பு ரிக்ஷா

(c) புதுமைப்பித்தன் (iii) விடியுமா

(d) ந.பிச்சமூர்த்தி (iv) காதறாக் கள்ளன்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | ii | iii | i | iv |
| (B) | iii | iv | i | ii |
| (C) | iv | iii | ii | i |
| (D) | i | iv | ii | iii |

39. (a) பெண்ணின் பெருமை (i) உ. வே. சா

(b) கோகிலாம்பாள் கடிதங்கள் (ii) பரிதிமாற் கலைஞர்

(c) பழையதும் புதியதும் (iii) மறைமலையடிகள்

(d) நாடகவியல் (iv) திரு. வி. க

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | ii | i | iii | iv |
| (B) | iii | ii | i | iv |
| (C) | iv | iii | i | ii |
| (D) | i | iv | ii | iii |

40. (i) தாலாட்டு என்பது நாட்டுப்புற இலக்கியம்

(ii) தாலாட்டு என்பது அழும் குழந்தைக்குப் பாடப்படுவது

(iii) தாலாட்டு மாமன் பெருமை கூறுவது

(iv) தாலாட்டு மனிதவாழ்கையில் முதலில் இடம் பெறுவது.

(A) (i); (ii) : சரி

(B) (i); (ii); (iii) : சரி

(C) (i); (iv) : சரி

(D) (i); (ii); (iii); (iv) : சரி

41. உதாத்த அணி புனைந்துரைப்பது

(i) வியத்தகு செல்வம்

(ii) மேம்படு உள்ளம்

(iii) வியத்தகு இயற்கை

(iv) மேம்படு காட்சி

(A) (i); (ii) : சரி

(B) (i); (iii) : சரி

(C) (i); (iv) : சரி

(D) (ii); (iv) : சரி

42. புறநிலை வாழ்த்து வரப்பெறும் பாக்கள் :

(i) வஞ்சிப்பா

(ii) ஆசிரியப்பா

(iii) வெண்பா

(iv) கலிப்பா

(A) (i); (iii) : சரி

(B) (ii); (iii) : சரி

(C) (ii); (iv) : சரி

(D) (iii); (iv) : சரி

43. (a) அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ் — (i) புறநானூறு

(b) மெய்வருத்தம் பாரார்; பசிநோக்கார்; கண்துஞ்சார் — (ii) திருக்குறள்

(c) அறம்பாடிற்றே ஆயிழை கணவ — (iii) அகநானூறு

(d) தொன்றுபடு பழமொழி இன்றுபொய்த் தன்றுகொல் — (iv) நீதிநெறிவிளக்கம்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | iv | i | iii | ii |
| (B) | i | iv | ii | iii |
| (C) | ii | iii | i | iv |
| (D) | ii | iv | i | iii |

**44.** (a) வினையெஞ்சுகிளவி (i) ஓடல்

(b) பெயரெஞ்சு கிளவி (ii) ஓடியவள்

(c) தொழிற் பெயர் (iii) ஓடிய

(d) வினையாலணையும் பெயர் (iv) ஓடி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | iii | i | ii | iv |
| (B) | i | iv | ii | iii |
| (C) | iv | iii | i | ii |
| (D) | ii | iii | i | iv |

பின்வரும் பகுதியைப் படித்துப்பார்த்துத் தொடர்ந்து இடம் பெற்றுள்ள வினாக்களுக்கு ஏற்ற விடையைச் சுட்டுக :

தமிழில் நெடுங்காலமாக வடமொழிச்சொற்கள் சிற்சில கலந்து வந்தன. கி.. பி., இரண்டாம் நூற்றாண்டுக்கு முன், சங்க இலக்கியக் காலத்தில் அவை நூற்றுக்கு ஒன்று என்ற விழுக்காட்டில் இருந்தன. கி. பி., ஏழு, எட்டாம் நூற்றாண்டுகளில் ஆழ்வார் நாயன்மார்களின் பாடல்களில் அவை நூற்றுக்கு மூன்று முதல் ஐந்து வரை கலந்தன. பிறகு காவியங்களிலும் அவ்வாறு கலப்பு நேர்ந்தது. கி. பி., பதின்மூன்றாம் நூற்றாண்டில் மணிப்பிரவாள நடை ஏற்பட்டுச் சைனர்களும் வைணவர்களும் உரைநடையில் எழுதிய காலத்தில் அவர்களின் சமயச்சார்பான எழுத்துகளில் வடசொற்களின் விழுக்காடு மிகுதியாயிற்று. இலக்கண இலக்கிய நூல்களுக்கு உரை எழுதியவர்கள் அந்த மணிப்பிரவாள நடையைக் கைவிட்டுக் கூடியவரையில் தூயதமிழிலேயே எழுதினார்கள். அவர்களின் எழுத்தில் வட சொற்கள் கலப்பு குறைந்தது. புராணங்களும் தல புராணங்களும் உலா, கலம்பகம் முதலியவைகளும் எழிதிய காலத்திலும் நூற்றுக்கு ஐந்து முதல் ஏழு எட்டு வரையில் அந்தக் கலப்பின் விழுக்காடு இருந்தது. யமகம், சிலேடை, மடக்கு முதலான சொல்லலங்காரங்களைக் கையாண்ட செய்யுள்களில் வடசொற்களின் விழுக்காடு மிகுந்தது. பிறகு, சொல்லலங்காரங்களும் செல்வாக்கு இழந்தன. சென்ற நூற்றாண்டில் இராமலிங்க சுவாமிகள் பாடல்களில் சிலவற்றில் தவிர, பெரும்பாலானவற்றில் வடசொற்கள் குறைவு. அவர் எழுதிய உரைநடையில் அவை மிகுதி . பைபிள் முதலானவற்றின் மொழிபெயர்ப்பில் , சொற்கள் கிறிஸ்துவ சமயத்தினர் வழங்கும் வடிவங்களைப் பெற்றன. இப்போது பைபிளும் நல்லதமிழில் - தூயதமிழ் - வடிவில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இஸ்லாமியச் சமயத்தைச் சார்ந்த புலவர்கள் எழுதிய நூல்களில் அரபுச்சொற்கள் கலந்தன. இன்றும் இஸ்லாமியக் குடும்பங்களைப் பற்றிய கதைகள் எழுதுவோர் , அவர்கள் வழங்கும் அரபுச்சொற்களை அவற்றில் கையாள்கிறார்கள். ஆங்கிலம் படித்த , அல்லது பெரிய நகரங்களில் வாழும் குடும்பங்களைப் பற்றிய கதைகளில் சில எழுத்தாளர்கள், அவர்களின் பேச்சில் உள்ளபடியே ஆங்கிலச் சொற்களை மிகுதியாகக் கலந்து எழுதுகிறார்கள். இவ்வாறு பலவகையான காரணங்களால் காலந்தோறும் , மற்ற மொழிச் சொற்கள் கலக்கும் முயற்சி வெவ்வேறு அளவில் வெவ்வேறு வேகத்தில் இருந்து வந்தபோதிலும் தமிழ்மொழியின் அடிப்படையான தனித்தன்மை மாறாமல் இருந்து வருகிறது. இந்தியாவில் இன்று உள்ள மொழிகளில், பிற மொழிச்சொற்களின் கலப்புக் குறைந்த மொழி தமிழ் என்று சொல்லத்தக்க நிலைமை உள்ளது.

**45.** இக்காலத் தமிழ்க்கதைகளில் சிலர் கலந்து எழுதும் மொழி :

(A) அரபு

(B) ஆங்கிலம்

(C) தெலுங்கு

(D) மலையாளம்

**46.** அரபுச்சொற்கள் புகக்காரணமாக இருந்தவர்கள்:

(A) சைவர்கள்

(B) சைனர்கள்

(C) கிறிஸ்தவர்கள்

(D) இஸ்லாமியர்.

**47.** உறுதிக்கூற்று : சைனர்களும் வைணவர்களும் சமயச்சார்பான உரைநடையில் வடசொற்களை மிகுதியாகக் கலந்து எழுதினர்.

காரணம் : இத்தகைய கலப்பு நடை மணிப்பிரவாளம் எனப்பட்டது.

(A) (உ) சரி ; (கா) தவறு

(B) (உ) தவறு ; (கா) சரி

(C) (உ) ; (கா) இரண்டும் சரி

(D) (உ) ; (கா) இரண்டும் சரியல்ல

**நிரல் படுத்துக :**

**48.** இலக்கியக்காலம் :

(A) சிற்றிலக்கியக்காலம், காப்பியக்காலம், பக்திக்காலம், சங்ககாலம்.

(B) பக்திக்காலம், காப்பியக்காலம், சங்ககாலம், சிற்றிலக்கியக்காலம்

(C) சங்ககாலம், பக்திக்காலம், காப்பியக்காலம், சிற்றிலக்கியக்காலம்

(D) காப்பியக்காலம், பக்திக்காலம், சங்ககாலம், சிற்றிலக்கியக்காலம்

**49.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | சங்ககாலம் | (i) | வடமொழிக்கலப்பு விழுக்காடு மிகுதி. |
| (b) | பக்திக்காலம் | (ii) | வடமொழிக்கலப்பு 1 விழுக்காடு |
| (c) | சிற்றிலக்கியக்காலம் | (iii) | வடமொழிக்கலப்பு 3-5 விழுக்காடு |
| (d) | கி.பி. 13 ஆம் நூற்றாண்டு | (iv) | வடமொழிக்கலப்பு 5-8 விழுக்காடு |

| | **a** | **b** | **c** | **d** |
|---|---|---|---|---|
| (A) | iii | iv | i | ii |
| (B) | ii | iii | iv | i |
| (C) | iv | iii | i | ii |
| (D) | iii | ii | i | iv |

**50.** (i) தமிழில் நெடுங்காலமாக வடமொழிச்சொற்கள் சிற்சில கலந்து வந்துள்ளன.

(ii) யமகம், சிலேடை, மடக்கு முதலியன இடம்பெற்ற செய்யுள்களில் வடசொற் கலப்பு மிகுந்தது.

(iii) மணிப்பிரவாள நடையைக் கைவிட்டு இயன்றவரையில் தூயதமிழில் எழுதும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

(iv) இந்தியாவிலேயே பிறமொழிக் கலப்பு மிக்க மொழி தமிழ் ஆகும்.

(A) (i); (ii); (iii); (iv) : சரி

(B) (i); (ii); (iv) : சரி

(C) (i); (ii); (iii) : சரி

(D) (ii); (iii); (iv) : சரி

- o O o -

**Space For Rough Work**